[பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்] [1982 செப்டம்பர் 9

94. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டத்திலுள்ள அளகாபுரி கிராமத்தைச் சேர்ந்த வடகம்பட்டிக்கிராமத்தை பூதான இயக்கக் கிராமமாக அறிவிப்பது குறித்து, ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 14-7-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1052 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

95. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம்—அனுமதிச் சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 16-10-1981 ஆம் தேதியிடப் பெற்ற 268 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

96. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மகளிர், பெண்டிர் விபச்சாரத் தடை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, சமூக நலத் துறையின் 6-8-1981 ஆம் தேதியிடப் பெற்ற 580 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1956 ஆம் ஆண்டு மகளிர் பெண்டிர் விபச்சாரத் தடைச் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 104/1956) 23 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

97. கோயம்புத்தூரிலுள்ள திருவாளர் இராமகிருஷ்ணா மிஷின் வித்தியாலயா பாலிடெக்னிக்கிற்குச் சொந்தமான TMW 1960 ஆம் எண் வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க வரிவீதத்திலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து—1) 29-6-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1660 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

98. 1979-80—ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ், ஆங்கிலம்).

21. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981--82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக் கருத்துகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

22. 1982–83 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ் செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

23. 1982–83 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

24. 1982-83 ஆம் ஆண்டில் துணை மானியக் கோரிக் கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

25. சிறைத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழு அளிக்கும் பதினான்காவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

26. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு.

27. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

28. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

29. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 200 வரை).

30. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 201 முதல் 400 வரை).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS